

சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திருச்சிராப்பள்ளி செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு நேற்று (3.9.2025) சென்னை விமான நிலையத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பூங்கொத்து வழங்கி வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வின் போது ஆளுநர் ஆர்.என்.ரவி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டத்தின் தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், நேற்று (03/09/2025) துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து, நவம்பர் 1, 2 தேதிகளில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெறவிருக்கும், சர்வதேச மனிதநேய மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். அவருடைய மனைவி இராணி மகிழ்நன், திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, ஸ்விட்சர்லாந்தில் இருந்து வந்திருந்த ஈழத் தமிழர்கள் தமயந்தி, லவசீலன் ஆகியோரும் துணை முதல்வரை சந்தித்தனர்.




தூத்துக்குடி இளைஞர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட 'புத்தொழில் களம்' திட்டத்தின் ஆதரவுடன் Deep Cycle Hub ஸ்டார்ட்அப் நிறுவனம் உருவாக்கியுள்ள 'சூழல் சிங்கம்' எனும் EWaste குறித்தான இணையதளத்தை சுப்பையா வித்யாலயம் மகளிர் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, Deep Cycle Hub நிறுவனர்கள் தீப்தி கேசரினோ மற்றும் ஜோசப் கேசரினோ ஆகியோர் பங்கேற்றனர்.




பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (02.09.2025) திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டதில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் தானியார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்து சத்தான உணவுப் பொருட்கள் மற்றும் பழங்களை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டு

# காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் மாணவ - மாணவிகளுக்கு ஆறுதல்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்!

திருவண்ணாமலை,செப்.4-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு விபத்து ஏற்பட்டு காயம் அடைந்த பள்ளி மாணவ மாணவிகளை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார் .

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (02.09. 2025) திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பள்ளி வாகனம் விபத்து ஏற்பட்டதில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் தானியார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ - மாணவிகளை நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்து சத்தான உணவுப் பொருட்கள் மற்றும் பழங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது;

ஜவ்வாதுமலைப் பகுதியில் உள்ள தானியார் கிராமத்தில் அரசு நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவ - மாணவிகள் படித்து வருகின்றனர். மாணவ-மாணவிகளின் நலன் கருதி பள்ளி சார்பில் தனியார் பஸ் ஏற்பாடு செய்யப்பட்டு தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் அழைத்து செல்லப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் பள்ளிக்கு 40 குழந்தைகளுடன் சென்ற பேருந்து திடீரென்று ஐந்து அடி பாலத்தில் கவிழ்ந்தது. அதன் விவரம் தெரிந்து விரைவாக வந்த மீட்பு குழுவினர் குழந்தைகளின் மீட்டு அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மேலும் காயமடைந்த 18 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 14 குழந்தைகளை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். மீதம் 4 குழந்தைகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும் சிறப்பு மருத்துவர் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு தினங்களில் அனைவரும் வீட்டுக்கு நலமுடன் செல்வார்கள் என்று தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில தடகள சங்கத் துணைத் தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை மாநகராட்சி துணை மேயர் ராஜாங்கம், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில்

# முன்னாள் பேரூர் செயலாளர் கே.ஞானபிரகாசம் இல்ல திருமண வரவேற்பு!

## டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

சென்னை, செப். 4-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நல்வாழ்த்துகளுடன் கே.ஞானபிரகாசம் - ஞா.சரஸ்வதி ஆகியோர்களின் இளைய மகன் ஜி.எஸ்.அரிகரன் - டி.சின்னதுரை ஜேம்ஸ் - சி.ராஜீ அவர்களின் மகள் சி.மேரி கிருபா ஆகியோரின் திருமண வரவேற்பு இன்று 04.09.2025 வியாழன்கிழமை மாலை 05.00 மணியளவில் மேற்கு தாம்பரம், முடிச்சூர் ரோடு, கிருஷ்ணா நகரில் அமைந்துள்ள தாம்பரம் வட்டார நாடார்கள் சங்க திருமண மாளிகையில், தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் திருமண வரவேற்பு நடைபெறகிறது.

இத்திருமண வரவேற்பில் பாராளுமன்ற மக்களவை கழகக்குழுத் தலைவர் - கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக தீர்மானக்குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் ஆகியோர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி மகிழ உள்ளனர்.

மேலும் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே.கருணாநிதி, எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், த.ஜெயகுமார், மாநகர நிர்வாகிகள் வ.விஜயரங்கன், பி.சதாசிவம், கழக செயற்குழு உறுப்பினர் ஜி.எஸ். அன்பு செழியன், பொதுகுழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர். கோல்டு.டி.பிரகாஷ், இ.எம்.சாம்சன், ஒன்றிய குழுத் தலைவர் பா.சங்கீதா, ஜி.கே.விவேகா னந்தன், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமூலம், பி. ஜோதிகுமார், ஆர்.தாமோதரன், லிங்கேஸ்வரி பாபு, சி.சுரேஷ், எல்.பெரியநாயகம், கா.சசிகலா, செ.ரமாதேவி, பி.புகழேந்தி, சி.ஜெகன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ப.ரவி, மு.வேல்முருகன், கே. ஜெகதீஸ்வரன், எஸ்.ரவி, ஜனனி சுரேஷ், தாம்பரம் மாநகர வர்த்தக அணியின் துணை செயலாளர் இரா. செல்வகுமார் மற்றும் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் / துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். கே.ஞானபிரகாசம் வரவேற்பதில் நன்றி கூறுகிறார்.

# திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணங்களை வழங்கினார்!



சென்னை, செப். 04-

'மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி' என்ற பேறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று திரு வி க நகர் சட்டமன்றத் தொகுதியில் மண்டலம் 6 வார்டு-76 சென்னை, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள மண்டல அலுவலகத்தில் நேற்று (3/09/2025) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம். 14 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 200 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 81 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 10 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 4 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை 46 மற்றும் பெயர் மாற்றுதல் 3 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - 152 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 9 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -1 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -566 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -146 என மொத்தமாக 1439 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1435 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர் எஸ் தமிழ்ச்செல்வி மண்டல அலுவலர் சரவணன் வட்டக் கழக செயலாளர்கள் எஸ் சசிகுமார்,எஸ் வெங்கடேசன் மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை! காஞ்சி வடக்கு மாவட்ட

# இளைஞர் அணி - மாணவரணி - மகளிரணி - மகளிர் தொண்டரணி கூட்டம்!

## கோல்டு பிரகாஷ் – பிரபு – உதயா கருணாகரன் – சசிகலா அறிக்கை!

சென்னை, செப்.4-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு, மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், மகளிர் தொண்டரணி சசிகலா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான பொது ஆலோசனை நாளை (வெள்ளிக்கிழமை 5.9.2025) கூட்டம் மாலை 4 மணிக்கு ஆலந்தூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்பு ஆலோசனை வழங்க உள்ளார்.

இந்த முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் அனைத்து அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.9.2025 அன்று வருகை, 10.9.2025 துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளார் மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அணிகளின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.